முருகப்பெருமான் துணை

**மகான் சிறப்புலி நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.07.2022, ஞாயிற்றுக்கிழமை

1. மறுமை வெல்லும் சக்தியை
   மாதவமாகத் தந்தருளுகின்ற
   ஆறுமுக அரங்க ஞானியே
   அண்ணலே உன்பெருமை கூறி
2. கூறியே சுபகிருது நள்ளி திங்கள்
   குறைவிலா அட்டம திகதி கதிர்வாரம்
   (சுபகிருது வருடம் ஆடி மாதம் 08 நாள், 24.07.2022 ஞாயிற்றுக்கிழமை)
   தெரிவிப்பேன் அருளாசிதன்னை
   தேசிகனுக்கு சிறப்புலி நாயனார் யானும்
3. யானும் உலகோர் ஞான வழிவர
   உரைப்பேன் அரங்கன் மார்க்கமாக
   ஞானமாம் சன்மார்க்க நெறியை
   நம்பிக்கை வைத்து வந்துவிட
4. வந்துவிட உலக மக்களுக்கு
   வரமாக ஞான வாழ்வு
   சிந்தை தெளிவு திடமுடன்
   செப்பிடுவேன் நல்வழிகளாக
5. ஆகவே மாற்றங்கள் கூடி
   அகிலம் காக்கும் வண்ணம்
   மகான்கள் மேலான ஈடுபாடு
   மாதவபலமாகக் கொண்டு
6. கொண்டுமே தனித்துவம் கூடி
   குருவருள் வழி திருவருள்தனை
   தொண்டுசெய்து அரங்கன் மூலம்
   தெரிவிப்பேன் உலக மக்கள் அடைவர்
7. அடைவர் உயர்வான சமூகம்
   ஆன்மீக ஞான அரசியல்களம்
   தடையற அமைந்து இனிதே
   தரணியே காக்கும் கந்த வேலன்
8. வேலனின் சூட்சும இயக்கம்
   வினவிட எங்கும் பரவி
   காலனை வெல்லும் பலமும்
   கண்டுரைப்பேன் தயவெனும் சக்தி
9. சக்தி கொண்டே சகலரும்
   சரணாகதி அடைய உலகில்
   சக்திமிகு ஞான உலகாக
   சடுதி மாற்றம் கண்டு

10. கண்டுமே இந்தப் பேருலகம்
கலியின் இடரை கடந்து
உண்டாகும் பாதுகாப்பு மிக்க
உயர்ஞான ஆட்சிக் காலமதை

11. காலமதை தனக்கு சாதகமாக்கி
கந்தவேலன் தலைமை தாங்கும்
காலமாக ஞான ஆட்சிகண்டிடும்
கண்டுரைத்த அருளாசி முற்றே

–சுபம்–